TAMIL / TAMIL

# COVID-19 தடுப்பூசிகளைப் பற்றிய உண்மைகள்

தடுப்பூசியேற்றல் உங்கள் சுகாதாரத்தைப் பாதுகாப்பதற்கான ஆகவும் வினைத்திறனான வழிகளில் ஒன்றாகும். ஒரு நோய்க்கு எதிராகப் பாதுகாப்பை உருவாக்குவதற்காகத் தடுப்பூசிகள் உடலின் இயற்கையான பாதுகாப்புக்களுடன் சேர்ந்து செயற்படுகின்றன. COVID-19 தடுப்பூசிகள் உங்கள் உடலின் நிர்ப்பீடனத் தொகுதிக்கு COVID-19 ஐ ஏற்படுத்தும் வைரசைக் கண்டறிந்து எதிர்த்துப் போராட அறிவுறுத்தல்களை வழங்குகின்றன.



கனடாவில் வசிக்கும் யாவருக்கும் இலவசத் தடுப்பூசிகள் கிடைக்கப் பெறும். மாகாணங்களும் ஆட்புலங்களும் தமது குடியிருப்பாளர்களுக்காக விபரமான தடுப்பூசியேற்றல் திட்டங்களை விருத்தி செய்துள்ளன.

## COVID-19 இற்காகத் தடுப்பூசியேற்றப்படுவது ஏன்?



### தடுப்பூசிகள் செயற்படுகின்றன

தடுப்பூசியேற்றல் COVID-19 இற்கு எதிராக உங்களைப் பாதுகாக்க உதவலாமென விஞ்ஞான, மருத்துவச் சான்றுகள் காட்டுகின்றன. தடுப்பூசியேற்றப்பட்டோருக்கு COVID-19 ஏற்பட்டால் அவர்களுக்குக் கடுமை குறைவாகவே நோயேற்படலாம் என்றும் ஆய்வுகள் காட்டுகின்றன.

### தடுப்பூசிகள் பாதுகாப்பானவை



பாதுகாப்பானவையும் வினைத்திறனானவையும் உயர் தரமானவையுமென எண்பிக்கப்பட்ட தடுப்பூசிகள் மாத்திரமே கனடாவிற் பயன்படுத்தப்பட அங்கீகரிக்கப்படுகின்றன. COVID-19 தடுப்பூசிகள் அவற்றின் உருவாக்கத்தின் போது விரிவாகச் சோதிக்கப்பட்டு, பின்னர் Health Canada இனாற் கவனமாக மீளாய்வு செய்யப்பட்டுள்ளன.

தடுப்பூசிகள் COVID-19 ஐ ஏற்படுத்தும் வைரசைக் கொண்டனவல்ல என்பதால் அவை உங்களுக்கு அதனை ஏற்படுத்த முடியாது. தடுப்பூசிகள் உங்கள் DNA ஐ மாற்றவும் முடியாது.



**mRNA தடுப்பூசிகள்** ஒரு கொரோனா வைரசுப் புரதத்தை உருவாக்கும் முறையை உங்கள் கலங்களுக்கு அறிவுறுத்துகின்றன. இப்புரதம் உங்களைக் COVID-19 இற்கு எதிராகப் பாதுகாக்க உதவும் ஒரு நிர்ப்பீடனப் பதிலளிப்பைத் தூண்டும்.

**வைரசு காவித் தடுப்பூசிகள்** நோயை ஏற்படுத்தாமல் உங்கள் உடலில் கொரோனா வைரசுப் புரதங்களை உற்பத்தி செய்யத் தீங்கற்றதாக்கப்பட்ட ஒரு வைரசைப் பயன்படுத்துகின்றன. mRNA தடுப்பூசிகளைப் போன்றே, இப்புரதம் உங்களைக் COVID-19 இற்கு எதிராகப் பாதுகாக்க உதவும் ஒரு நிர்ப்பீடனப் பதிலளிப்பைத் தூண்டும்.

## பொதுச் சுகாதார நடவடிக்கைகளைப் பின்பற்றுவதைத் தொடர்தல்



COVID-19 தடுப்பூசிகள் இக்கொள்ளை நோயை நிறுத்த உதவும் முக்கியமான கருவிகளாகும். தற்போது, COVID-19 பரவுவதைக் குறைக்கவும் உயிர்களைக் காக்கவும் நாம் இன்னமும் பொதுச் சுகாதார நடவடிக்கைகளைப் பின்பற்ற வேண்டும்.

சமஷ்டி, மாகாண, ஆட்புல அரசாங்கங்கள் சமூகங்களில் COVID-19 பரவல் இடர்ப்பாட்டைக் கணிப்பதைத் தொடரும். அதிகமானோருக்குத் தடுப்பூசியேற்றப்படுவதுடன் நாம் விஞ்ஞானத்தைப் பற்றி இன்னும் கற்கும் போது நடவடிக்கைகள் சரிக்கட்டப்படும். யாவரும் நாம் ஒன்றாக இருக்கக் கூடிய எதிர்காலத்தை எதிர்பாக்கின்றனர். அது வரை, நாம் ஒருவரையொருவர், விசேடமாக COVID-19 இனால் கடுமையாக நோய்வாய்ப்படக் கூடிய பலவீனமானோரைப் பாதுகாக்க வேண்டும்.

உண்மைகளைப் பெறுங்கள். இன்னுமறிய Canada.ca/covid-vaccine இற்குச் செல்லுங்கள்.

Gouvernement du Canada Government of Canada

Canada